# முன்னுரை

ஸ, ரி, க, ம, ப, த, நி என்ற ஏழு ஸ்வரங்களிலும் அம்பாள் உறைந்திருப்பதாக நம் சாத்திரம் கூறுகிறது. இந்த ஏழு ஸ்வரங்களில் உள்ள விக்கிருதி ஸ்வரங்களின் பேதங்களைக் கொண்டு அமைந்ததே 72 மேளராகங்கள் இதனை ஏறபடுத்தியவர் ஸ்ரீ வேங்கடமகி அவர்கள் ஆவர். இந்த மேளங்கள் பல இராகங்களின் உற்பத்திக்கு காரணகர்த்தாக்களாக அமைந்திருப்பதால் மேளகர்த்தாராகங்கள் என கூறப்படுகிறது.

பௌததிகம் விஞ்ஞானம் முதலிய எல்லாவித கலைகளின் நுட்பங்களும் வளர்ச்சி அடைவதைபோல் இசைக்கலை நுட்பங்களும் வளர்ச்சி அடைந்துள்ளன. சுமார் 50 வருடங்களுக்கு முன் ஏறக்குறைய 15 மேளங்களே வழக்கத்தில் இருந்தன. தற்காலத்தில் 30 35 மேளங்கள் கலபமாக பாடும் விதத்தில் இசைக்கலை வளர்ச்சியடைந்துள்ளன. கச்சேரிகளில் வித்வான்கள் பழக்கத்திற்கு வராத ராகங்களில் ஒன்றினை எடுத்துக்கொண்டு, அந்த ராகத்தின் பெயரையும் அறிவித்துவிட்டுப் பாடும் பழக்கத்தை மேற்கொண்டிருக்கிறுர்கள். இது மிகவும் சிறந்த முறையாகும். மக்களும் இதனை வெகுவாக வரவேற்கிறுர்கள். தற்காலத்தில் எங்கும் பல இசைக்கல்லூரிகள் ஏற்பட்டு ஒவ்வொரு வருடமும் பல இசை வல்லுநர்கள் உருவாக்கபடுகின்றன. இனி, எழுபத்திரண்டு மேளராகங்களும் எல்லோராலும் எளிதாகப் பாடப்படும் நிலை குறுகிய காலத்திலேயே வரும்.

தன்னுடைய முன்னோர்கள் தங்களுக்கு சில ராககங்களை அறிமுகப்படுத்தி, பிரயாசையின்றி சுலபமாகப் பாடுவதற்கான தொண்டினை செய்ததைப் போல், ஒவ்வொரு வித்வானும் தங்களுக்குப்பின் பாடுபவர்களுக்கு அனுநுகூலமாக இருக்க சில பழக்கத்திலில்லாத ராகங்களை பாடிப் பாடி பழக்கத்திற்கு கொண்டுவர வேண்டும். இதுவே சங்கீதத்திற்கு செய்யும் சிறந்த தொண்டாகும் . அமரர் கல்கி அவர்கள் கூறியதைப்போல் பழமையையே கையாண்டு புதியதைத் தொடாமலிருந்தால் கலைகள் காலத்திற்கேற்ப வளர்ச்சியடையாது. அவ்வப்போது புதிய தண்ணீர் பாயாத குளத்தை போல் கலையும் தேக்கமடைந்து வற்றிப்போய்விடும்.

சிறிது அதிகப்படி பிரயாசை எடுத்துக் கொண்டால் எந்த மேளராகத்தையும் சுலபமாகப் பாடலாம். பழக்கமில்லாத ராகத்தைப்பாடும் பொழுதும்தவறு ஏற்பட்டு அபஸ்வரம் வந்தால் உடனே தெரியவரும். தவற்றை சரிசெய்து கொள்ளலாம். அபஸ்வரமே தெரியாமல் ஒருபோதும் இருக்காது. நம்முடைய நடோடிக் கதைகளில் பேய் கூட அபஸ்வரம் தெரிந்து ஊரை விட்டு ஓடினதாக வருகிறது. மேளராகங்களில் பழக்கமான தோடி, சங்கராபரணம் போலவேதான் மற்ற ராகங்களிளும், ஒரே அளவுள்ள நிலப்பரப்பில் கட்டிய ஏழு அறைகளுடன் கூடிய வீடுகளைப்போல் தான் 72 மேளங்களும். சில அறைகள் தான் இடம் மாற்றப்பட்டிருக்கும். அது போலவே 72 மேளத்திலும் ரி, க, ம, த, நி என்ற ஸ்வரங்கள்மட்டும் இடம் மாறுகின்றன.

இம் மேளகர்த்தா ராகங்களில் முதன் முதலாக ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் அவர்கள் வடமொழியில் கீர்த்தனைகள் இயற்றியுள்ளார். பின்பு ஸ்ரீ மஹாவைத்தியநாதய்யர் இந்த 72 மேளங்களையும் வைத்து, வடமொழியில் ராகமாலிகையாகச் செய்துள்ளார். திருவொற்றியூர் தியாகய்யர் 72 மேளங்களிலும் கிருதிகள் இயற்றியுள்ளார். தியாகராஜ ஸ்வாமிகள் விவாதி ராகங்கள் என்று சொல்லப்படும் மேளராகங்களிலும் மிகரஞ்ஜகமாக க்ருதிகள் அருளியிருக்கிறுர்கள் 1939ம் வருடம் ஸ்ரீ கோடீஸ்வரய்யர் அவர்கள் 72 மேளராகங்களிலும் தமிழ் பாடல்கள் புனைந்து 'கந்தகானமுதம்' என்னும் தலைப்பில் புத்தகம் வெளியிட்டுள்ளார். 1950ல் ஸ்ரீ பால முரளி கிருஷ்ணு அவர்கள் தெலுங்கிலும், வடமொழியிலும் இம்மேளகர்த்தா முழுவதிலும் கீர்த்தனைகள் கவனம் செய்துள்ளார். வீணை வித்வான் ஸ்ரீ பாலசந்தர் அவர்கள் இசைத்தட்டில் 72 மேளகர்த்தா ராகங்களையும் ராகத்தின் ஸ்வரூபம் நன்கு விளங்கும்படி விவரமாக வீணையில் வாசித்துள்ளார்.

மேளராக 'க்ருதிமாலா'வில் பல தெங்வங்கள் பேரிலும், இனிய எளிய தமிழ்மொழியில் பாடல்கள் அமைந்துள்ளன. பழக்கத்திற்கு வராத மேளராகங்களிலுள்ள பாடல்களும், தெய்வ சங்கல்பத்தில் யாவரும் பாடும் படியாக சுலபமான வர்ண மெட்டுக்களில் உள்ளன. இந்தப் பாடல்கள் யாவும், வரிசையக்கிரமமாக கவனம் செய்யப்பட்டதல்ல. கடவுள் அருளால் ஒவ்வொரு சமயமும் இசையோடு பாடல் வரும் செய்யப்பட்டதல்ல. கடவுள் அருளால் ஒவ்வொரு பாட்டும் கவனத்திற்கு வந்ததும் அகில இந்திய ரேடியோவில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற வீணைவித்வான் திரு. ஜி.என். தண்டபாணி அவர்களிடம் பாடிக்காட்டுவேன் அவர் சிறிதும் சலித்துக்கொள்ளாமல், தன்னுடைய

பொன்னுன நேரத்தை என்பொருட்டு செலவழித்து என்னை, ஊக்குவித்தார். டெல்லி பல்கலைக்க ழகத்தைச் சேர்த்த திரு. டி.ஆர். சுப்ரமணியம் அவர்களும், இப்பாடல்களைக் கேட்டு ஆங்காங்கே இதனை மேன்மைபடுத்தும் படியான அபிப்ராயங்களைத் தந்து உதவி புரிந்துள்ளார்.

இப்புத்தகத்தில் ஸ்வரப்படுத்தியுள்ளதில் ஒரு புதுமையைக் காணலாம். ஒரு தட்டுக்கு நா ன்கு ஸ்வரங்களே பல புத்தகத்யிதிலும் இருக்கும். ஒரு தட்டுக்கு இரண்டு ஸ்வரங்கள். ஒரு களைப் பாட்டிற்கும், ஒரு தட்டுக்கு நான்கு ஸ்வராங்கள், இரண்டு களைப்பாட்டிற்குமாக ஸ்வரப்படுத்தப் பட்டுள்ளது. பாடும் கால ப்ரமாணத்தை குறிக்கும் வகையில் மத்யமகால ஸ்வரங்களுக்கு கீழே கே ாடிட்டும் ஒரு மாத்திரை ஸ்வரங்கள் ஒரு அக்ஷரமாகவும், நீண்ட ஸ்வரங்களை தீர்க்கமாகவும், அத ாவது கா மா வென்றும் கூடுதலாக வரும். கார்வையுள்ள ஸ்வரங்களுக்கு; என்று கார்வைக்கு தகுந்த வாறு சேர்த்தும் எழுகப்பட்டுள்ளது. மத்யமகால ஸ்வரங்களுக்குக் கீதே கோடிட்டிருப்பது பல ஸ்வ ரங்களுக்கு நடு நடுவில் இடம் விடப்படுவதுபோல் கூடுமானவரையில் ராகவடிவங்களையும் இட ம்விட்டு தனித்துக் காட்டப்பட்டுள்ளது. க்ருதிகளை அவரவர்கள் கற்பனைக்கேற்ப சங்கதிகளை சே ர்த்துக் கொள்ளும் பொருட்டு மெட்டின் அடிப்படை ஸ்வரங்களே எழுதப்பட்டுள்ளது.

என்து குருமார்களான காலஞ்சென்ற திருமதி சேதுபாய், வீணை வித்வான் திரு வரதய்யா அவர்களுக்கு அஞ்சலி செலுத்தி, தஞ்சை சங்கீதபூஷணம் திரு பி.வி. கணேசய்யர், களக்காடு திரு எ ஸ். ராமநாராயணய்யர், சங்கீதகலாநிதி திருமதி டி.கே. பட்டம்மாள் அவர்களுக்கும் எனது பக்தியு ம் பணிவும் கலந்த வணக்கத்தைச் செலுத்துகின்றேன்.

இவர்களது ஆசியாலும் தெய்வத்தின் அருளாலும், எனது கணவர் டாக்டர் எம்.என். தண் டபாணி அவர்களது சலிப்பில்லாத விடாமுயற்சியும், உழைப்பும் ஒருங்கேதந்த பலத்தாலும் இந்நூ லை வெளிளியிடுகிறேன்.

சீரிய முறையில் ஸ்வரப்படுத்தித் தந்துதவிய வித்வான் திரு. எம்.என். தண்டபாணி அவர்க ளுக்கு என்னுடைய நன்றி கலந்த வணக்கம்.

இப்புத்தகத்தை பரிசீலித்து புகழுரை வழங்கியுள்ள வீணை திரு. எஸ். பாலசந்தர், ப்ரொப ஸர் திரு. எஸ். ராமனுதன், திரு டி.எஸ். பார்த்தசாரதி, இவர்கள் அனைவரும் நன்றிகலந்த வணக்கத் தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறந்த முறையில் இப்புத்தகத்தை லேசர் டைப்செட்டிங் செய்து தந்த மாருதி பிசினஸ் சி ஸ்டம்ஸ் அவர்களுக்கு நன்றி கலந்த வணக்கம்.

இப்புத்தகத்தில் உள்ள சிறப்புகளை பெரிதாகவும், குறைகளை குறைவாகவும் கொண்டு வித்வான்கள் பெரிய மனதுடன் என்னை ஆதரிப்பார்கள் என்று நம்புகிறேன்.

நிதி உதவி புரிந்த மத்திய சங்கீத நாடக அகடமியினருக்கும், குறித்த காலத்தில், சீரிய மு றயில், சிறப்புடன் அச்சிட்டுத்தந்த ஜெயந்தி அச்சகத்திற்கும் எனது நன்றி.

எனது அறியாப்பருவத்திலேயே, என்னகத்துள்ள இசையார்வத்தையறிந்து,
முதன் முதல் தானே கிருவாகி, பின்னர் தக்க குருமார்களைக் கொண்டு,
எனக்கு இசையை கற்பிக்கச் செய்த என் அன்னை
லால்குடி வரலாம்பாள்ராமரத்தினம் அவர்களுக்கு என் முதற்கண்
அஞ்சலலியைச் செலுத்தி அன்னுரது மலரடியில் இம்
'மேளராககிருதிமாலா'வை மனநிறைவுடன் சமர்ப்பிக்கிறேன்.

டி. பட்டம்மாள்